சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 20.01.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **24/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-13 |
| சாட்சியின் பெயர் | : | ம. தினேஷ்குமார் |
| தந்தை பெயர் | : | மணிவண்ணன் |
| கிராமம் | : | G3 Paris Apartment ,<br>பிச்சாண்டார் கோவில்,<br>திருச்சி. |
| தாலுக்கா | : | திருச்சி |
| தொழில் | : | காவல் துணை<br>கண்காணிப்பாளர் |
| வயது | : | 55 |

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரிகள் இருவரும் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா-1 சூரியா மீது 1ம் எதிரி நடராஜன் கொரடாச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகார் குற்ற எண்.911/2020 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் குற்ற எண்.911/2020 என்ற வழக்கின் வழக்கு கோப்பை பார்த்தால் தெரியும். இந்த வழக்கு கொரடாச்சேரி காவல் நிலைய 912/2020 குற்ற வழக்கு என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் புலன் விசாரணை செய்தபோது 1ம் எதிரி அ.சா-1ன் மீது கொடுத்த புகார் குறித்து விசாரணை மேற்கொண்டீர்களா என்றால் இல்லை. இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது உதவி ஆய்வாளர் அ.சா-10 வீரபரஞ்சோதி என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் உதவி ஆய்வாளர் அ.சா-10 வீரபரஞ்சோதி குற்ற எண்.911/2020 குறித்து எந்த தகவலும் சொன்னாரா என்றால் இல்லை. இந்த சம்பவ இடம் 1ம் எதிரியின் வீட்டின் முன்பு தான் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கும், அ.சா-1சூரியா வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு என்றால் அடுத்த தெரு. அ.சா-1 சூரியா கொடுத்த புகாரில் அ.சா-2 சுமதி சம்பவ இடத்திற்கு வந்தாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா-1 சூரியா மருத்துவமனையில் இருந்து தன்னிச்சையாக வெளியே சென்றது தொடர்பாக விசாரணை எதுவும் மேற்கொண்டீர்களா என்றால் இல்லை. 1ம் எதிரி அ.சா-1 சூரியா மீது கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக அ.சா-1 சூரியா நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக புகார் கொடுத்து அந்த புகாரை சரியாக விசாரணை செய்யமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர் என்றால் சரியல்ல. நீங்கள் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், இந்த ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

ஒரே நேரத்தில் நடந்த ஒரு குற்றம் குறித்து இரண்டு தரப்பினர்கள் எதிர் எதிராக புகார் அளித்தால் அந்த இரண்டு புகாரையும் ஒரே அதிகாரி தான் விசாரணை செய்யவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.01.20 18:30:02 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.